மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

8. அறிவிப்பு

தமிழ்நாடு, 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுப்பதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. அரசினர் மசோதாக்கள்

தமிழ்நாடு, 1970 ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—
"That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation Bill, 1970".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையினுடைய இன்றைய நிகழ்ச்சிகள் முடி
பி. ப. 1-04 வுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

(10) பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள் ஏதுமில்லை.

இணைப்பு—I

[461-ம் பக்கத்திலுள்ள 79-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

(அ) மானியம் பெறும் தனியார் பள்ளிகளுக்கு மட்டுமே பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று சம்பளங்கள் கொடுக்க வகை செய்யும்பொருட்டு பணியாளர் மானியம் (staff grant) போதுமான அளவு முன்னதாகவே வழங்கப்படுகிறது. நகராட்சி தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்குச் சம்பளம் நகராட்சி நிதியிலிருந்தே